நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# தோட்டக்கலைத்துறையில் விவசாயிகள் பதிவு செய்யலாம்

First Published : 12 Jun 2012 12:16:34 PM IST

பெரம்பலூர், ஜூன் 11: பெரம்பலூர் மாவட்டத்தில், தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் பயன்பெற விவசாயிகள் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின் மூலம் மா அடர் நடவு, திசு வாழை சாகுபடி, நறுமணப் பயிர்கள் மற்றும் மலர்கள் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளுக்கு நடவு பொருள்கள் மற்றும் இடுபொருள்கள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ரக காய்கறி விதைகள், மானிய விலையில் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் விநியோகம் செய்யப்பட உள்ளன.

தேசிய நுண்ணீர் பாசன இயக்க திட்டத்தின் கீழ் தோட்டக்கலை மற்றும் வேளாண் பயிர்களில் சொட்டுநீர் பாசனம் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 % மானியமும், மற்ற விவசாயிகளுக்கு 75 % மானியமும் வழங்கப்பட்டு வருகிறது.

உயர் தொழில் நுட்ப உற்பத்தி பெருக்கத் திட்டத்தின் கீழ், வீரிய ரக காய்கறி விதைகள் மற்றும் இடுபொருள்கள் மானிய விலையில் விநியோகிக்கப்பட உள்ளந. பந்தல் அமைத்து காய்கறிகள் சாகுபடியை ஊக்குவித்தல், துல்லிய பண்ணையம் அமைத்தல், மானாவாரி பகுதி அபிவிருத்தி திட்டம், இயந்திரம் மூலம் மரவள்ளி கரணை வெட்டுதல், மஞ்சள் அறுவடை மற்றும் பதப்படுத்தல் ஆகியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத் திட்டத்தின் கீழ் கோலியஸ் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு பிரிமியம் செலுத்தி காப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகள் வானிலை சார்ந்த காப்பீட்டுத் திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு பிரிமியம் செலுத்தி காப்பீடு செய்து பயன்பெற வேண்டும்.

தோட்டக்கலை பயிர் செய்வது தொடர்பான விவரங்களுக்கு பெரம்பலூர் - 94871 56511, 04328 - 220311, ஆலத்தூர் - 91500 17351, வேப்பூர் - 9486311707, வேப்பந்தட்டை - 9486311707 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்களது பெயர்களை அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து பயன்பெறலாம்.

## கறவை மாடு கடன்: திறன் வளர்ப்பு பயிற்சி

First Published : 12 Jun 2012 12:16:50 PM IST

அரியலூர், ஜூன் 11: அரியலூர் மாவட்டத்தில் கறவை மாடு வளர்ப்புக்காக கடன் பெற்றவர்களுக்கு 2 நாள்கள் திறன் வளர்ப்பு பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (டாப்செட்கோ) மூலம் ஆனந்தவாடி, இலுப்பையூர், விளாங்குடி, பொன்பரப்பி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற 107 பேருக்கு 2 நாள்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

முதல் நாள், உள்கட்ட பயிற்சியில், கறவை மாடு வளர்ப்பு முறைகள், தடுப்பு ஊசிக்கான கால இடைவெளி, நோய்த் தடுப்பு முறைகள், பராமரிப்பு, தீவனங்கள் ஆகியவை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இரண்டாம் நாள், செந்துறை வட்டத்தில் இயங்கும் மொத்த பால் சேமிப்பு கிடங்கு மற்றும் நாகமங்கலம் விவசாய பண்ணையில் களப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சித் தொடக்க நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அனு ஜார்ஜ் கலந்து கொண்டு பேசினார்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் குணசேகர், கூட்டுறவு சங்கங்கள் இணைப் பதிவாளர் முருகன், பால்வள துணைப் பதிவாளர் கஸ்தூரிபாய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பருவமழை தாமதம்: விவசாயிகள் கவலை

First Published : 12 Jun 2012 10:25:57 AM IST

உதகை, ஜூன் 11: நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை இதுவரை தொடங்காதது விவசாயிகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், ஆண்டுதோறும் மே மாதத்தில் பெய்யும் கோடை மழை நடப்பாண்டில் 972 மி.மீ. பெய்தது. இது கடந்த ஆண்டைவிட 243 மி.மீ. அதிகம் என்பதால், நடப்பாண்டில் பருவமழையும் குறித்த நேரத்தில் தொடங்கி விடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. இதனால் மாரிக்கால விவசாயப் பணிகளை விவசாயிகள் முன்கூட்டியே தொடங்கி விட்டனர்.

ஆனால், மாவட்டத்தில் வழக்கமாக ஜூன் முதல் வாரத்தில் தொடங்கும் தென்மேற்குப் பருவமழை இதுவரை பெய்யத் தொடங்கவில்லை. இது விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில், முதல் 11 நாள்களில் சுமார் 3,500 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. அதிகபட்சமாக ஜூன் 2ம் தேதி 1,191 மில்லி மீட்டரும், 3ம் தேதி 945 மில்லி மீட்டரும் மழை பதிவானது. ஆனால், நடப்பாண்டில் இதே காலகட்டத்தில் இதுவரை 350 மி.மீ. மழை மட்டுமே பதிவாகியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாகவே நீலகிரி மாவட்டத்தில் பருவமழைப் பொழிவு மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. (பார்க்க, பெட்டிச் செய்தி) ஜூன் மாதத்தில் கிடைக்க வேண்டிய சராசரி மழை அளவு குறைந்தும், ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் வழக்கத்தை விட அதிகமாகவும் மழைப்பொழிவு உள்ளது. இதனால் பருவமழை முடியும் காலமான செப்டம்பர் மாதத்துக்குள் சராசரி மழை அளவு கிடைத்து விடுகிறது என்றாலும் தங்களுக்கு இதனால் பயனில்லை என்கின்றனர் விவசாயிகள்.

வழக்கமாக, ஜூன், ஜூலை மாதங்களில்தான் பருவமழை தீவிரமாகப் பெய்யும். இதில் ஜூன் மாதத்தில் பெய்யும் மழைதான் விவசாயத்துக்கு ஆதாரம். எனவே, மழை தொடங்கத் தாமதமானால் பாதிக்கப்படுவது நாங்கள்தான். மே மாதத்தில் பயிரிடப்பட்ட மலைக்காய்கறிகளுக்குத் தேவையான நீரைக் கூடப் பெற முடியாமல் தவித்து வருகிறோம் என்கின்றனர் அவர்கள்.

பருவமழைப் பொழிவில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் புவி வெப்பமயமாதலின் விளைவு என்கிறார் சிபிஆர் சுற்றுச்சூழல் கல்வி மைய கள அலுவலர் குமாரவேல். இதனால் மழை அடர்த்தி குறைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மூங்கில் பூத்ததால் அச்சம்: பொதுவாக மூங்கில் பூ பூக்கும் ஆண்டுகளில் பருவமழை பொய்க்கும் என்பது நீலகிரி மாவட்ட பழங்குடியின மக்களின் நம்பிக்கை. நடப்பாண்டில் மாவட்டத்தின் பல பகுதிகளில் மூங்கில் பூத்துள்ளதால் பருவமழை பொய்த்து விடுமோ என்று அஞ்சுகின்றனர்.

ஆனால், பருவமழை இந்த ஆண்டு வழக்கம்போலவே இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. தென்மேற்குப் பருவமழையின் வரவேற்பு மையமான கேரளத்திலேயே மழைப்பொழிவு தாமதமாகத்தான் தொடங்கியிருக்கிறது. எனவே, ஜூன் 15-க்குள் நீலகிரியில் மழைப்பொழிவு தொடங்கும் என வானியல் ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நீலகிரியில் பருவமழை- ஓர் பார்வை

ஆண்டு மழைப்பொழிவு (மி.மீ.)

| | ஜூன் | ஜூலை |
|---|---|---|
| 2001 | 3,706 | 4,285 |
| 2002 | 2,672 | 1,332 |
| 2003 | 2,692 | 1,332 |
| 2004 | 7,980 | 2,105 |
| 2005 | 2,649 | 6,724 |
| 2006 | 3,767 | 5,029 |
| 2007 | 6,411 | 2,186 |
| 2008 | 2,315 | 4,944 |
| 2009 | 1,098 | 5,464 |
| 2010 | 1,182 | 3,508 |
| 2011 | 7,728 | 2,797 |

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் அமைச்சர் ஆய்வு

First Published : 12 Jun 2012 12:11:34 PM IST

திருச்சி, ஜூன் 11: திருச்சி மாவட்டம், திருப்பைஞ்ஞீலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜு திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

சங்க அலுவலக வளாகத்தில் 124 மரக்கன்றுகளையும் அவர் நட்டுவைத்தார். தொடர்ந்து மண்ணச்சநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கட்டப்பட்டு வரும் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தானிய சேமிப்பு கிட்டங்கி கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்ட அவர், பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில், சுற்றுச்சுவர் அமைக்க அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, மண்ணச்சநல்லூர் எம்எல்ஏ டி.பி. பூனாட்சி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பரமேசுவரி முருகன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் (பொ) கோ. ராஜேந்திரபிரசாத், பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர் மொ. சிராஜுதீன், மாவட்டக் கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் மு. கனகசபாபதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

உர விலை உயர்வை கட்டுப்படுத்தி விவசாயிகளின் துயர் துடைக்க வேண்டும்: வைகோ

First Published : 12 Jun 2012 10:57:46 AM IST

Last Updated : 12 Jun 2012 11:13:35 AM IST



சென்னை, ஜுன் 12 : உர விலை உயர்வு குறித்து மதிமுக பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் விவசாயம் நலிந்து வருகிறது. அதில் ஈடுபட்டுள்ள கோடிக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகி உள்ளது. விவசாயிகளின் விளை பொருட்களுக்கு கட்டுபடியான விலை எப்போதும் கிடைப்பதில்லை. கிணற்றடி நீர்மட்டம் குறைந்து பாசனத்திற்கு போதிய தண்ணீரும் கிடைப்பதில்லை. இயற்கை அடிக்கடி வஞ்சிப்பதால் மானாவாரி மகசூலும் விவசாயிகள் எதிர்பார்த்த அளவுக்கு விளைச்சலைத் தரவில்லை. இதுமட்டுமல்லாது அண்டை மாநிலங்கள் நமக்கு உரிமையான தண்ணீரைத் தர மறுப்பதால் ஆற்றுப் பாசனத்தை நம்பி உள்ள 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில், வேளாண்மை கேள்விக் குறியாக உள்ளது.

இந்நிலையில் விவசாயி தம்முடைய வயலுக்கு பயன்படுத்துகின்ற ரசாயன உர விலையானது பன்மடங்கு உயர்ந்துவிட்டது. 50 கிலோ எடையுள்ள டிஏபி உரம், 2009 இல் 486 ரூபாய்க்கும், 2010 இல் 507 ரூபாய்க்கும், 2011 இல் 643 ரூபாய்க்கும், தற்போது 2012 இல் 1250 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

இதே போல் 50 கிலோ எடையுள்ள கலப்பு உரம், 2009 இல் 316 ரூபாய்க்கும், 2010 இல் 347 ரூபாய்க்கும், 2011 இல் 476 ரூபாய்க்கும், தற்போது 857 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. 50 கிலோ எடையுள்ள பொட்டாஷ் உரம், 2009 இல் 206 ரூபாய்க்கும், 2010 இல் 219 ரூபாய்க்கும், 2011 இல் 299 ரூபாய்க்கும், தற்போது 840 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

உரத்தின் விலை ஒரே ஆண்டில் 100 முதல் 200 சதவிகிதம் உயர்ந்துள்ள செயல், விவசாயிகளின் வயிற்றில் அடிக்கப்பட்டுள்ள செயலாகும். இதற்கு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை, கட்டுப்படியான விலையின்மை போன்ற காரணங்களால் தலை தாளாமல் வாழ்ந்த விவசாயக் குடும்பங்கள் நொடித்து, நிம்மதி இன்றி தவித்துக் கொண்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் இந்த உரவிலை உயர்வு பேரிடியாக விவசாயிகளைத் தாக்குகிறது. எனவே விவசாயிகளின் குரல்வளையை முறிக்கும் இந்த உர விலை உயர்வை மறுபரிசீலனை செய்து, குறைந்தது 2009ம் ஆண்டில் இருந்த நிலைக்காவது குறைக்க வேண்டும்.

அவ்வாறு குறைக்க மத்திய அரசு முன்வரவில்லை என்றால், உயர்த்தப்பட்ட விலையை மானியமாகவாவது விவசாயிகளுக்கு வழங்க முன்வர வேண்டும். விவசாயிகளின் விலை பொருட்களுக்கு கட்டுப்படியான விலை, விவசாயிகளின் விளைச்சல் அளவை உறுதி செய்து அதில் நட்டம் ஏற்பட்டால் உதவும் வகையில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை வலிமையாக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் விரைந்து செயல்பட முன்வர வேண்டும் என்பதே பலகோடி விவசாயக் குடும்பங்களின் ஏக்கமும், எதிர்பார்ப்பும் ஆகும் என்று வைகோ கூறியுள்ளார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**பருத்தியில் வேர் அழுகல் நோயினைக் கட்டுப்படுத்த...**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,00:00 IST

வேர் அழுகல் நோயானது விதை முளைத்து ஒன்று அல்லது இரண்டு வார காலத்தில் தாக்கினால் விதை உறையில் கருப்பு நிறத் திட்டுக்கள் காணப்படும். தண்டு பகுதி சிறுத்து, செடி வாடிவிடும். அதனால் வயலில் இடைவெளி அதிகமாகி திட்டு திட்டாக காணப் படும். இந்நோயானது 4 முதல் 6 வார வயதுடைய செடியைத் தாக்கினால் சிவப்பும் பழுப்பும் கலந்த திட்டுக்கள் மண்ணுக்கு அருகில் உள்ள தண்டுப்பகுதியில் காணப்படும். பின்னர் அப்பகுதி கருப்பு நிறமாக மாறி, மண்ணுக்கு அருகில் உள்ள தண்டுப்பகுதியுடன் செடி ஒடிந்துவிடும். செடி காய்க்கும் தருணத்தில் வேரழுகல் நோய் அதிகமாகக் காணப்படும். வேரழுகல் நோய் தாக்கிய செடிகள் திடீரென்று வாடி

வதங்கிவிடும். இந்த செடிகளைப் பிடுங்கிப் பார்த்தால் பக்கவாட்டு வேர்கள் சிறுத்தும் வேர்ப்பகுதி அழுகியும் காணப்படும். தாக்கப்பட்ட செடிகளின் பட்டை நார் நாராகவும் எளிதில் உடையக் கூடியதாகவும் இருக்கும். நோயினால் பாதிக்கப்பட்ட செடியைப் பிடுங்கிப் பார்த்தால் கருப்பு நிற பூசண வளர்ச்சியைக் காணமுடியும்.

**சாதகமான சூழ்நிலைகள்**: வறண்ட வானிலைக்குப் பின் கனத்த மழை பெய்தாலும் மண்ணின் வெப்பநிலை 35 முதல் 39 டிகிரி செ. இருந்தாலும் ஈரப்பதம் 15 முதல் 20% இருந்தாலும் பருத்திக்கு முன் காய்கறிகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பயறுவகைப்
பயிர்கள் பயிரிட்டாலும் இந்நோயின் தாக்குதல் அதிகமாக இருக்கும்.

நோய் பரவும் விதம்: நோய்க்காரணியானது மண் மூலம் முதன்மையாகப் பரவுகிறது.
இரண்டாவதாக பாசன நீர், காற்று ஆகியவற்றின்மூலம் பரவுகிறது.

**கட்டுப்படுத்தும் முறைகள்**: பருத்தி விதைக்கு ஒரு கிலோவுக்கு 2 கிராம் பவிஸ்டின் அல்லது 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் என்ற விகிதத்தில் விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். நோயினால் பாதிக்கப்பட்ட செடியைப் பிடுங்கிவிட்டு, அதற்குப் பின் கார்பன்டாசிம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் தாக்கப்பட்ட மற்றும் அதைச் சுற்றியுள்ள செடிகளின் வேரில் ஊற்றி நோயைக் கட்டுப்படுத்தலாம். விதைக்கும் காலம் அதிக வெயில் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
ஊடுபயிராக சோளம் பயிரிட்டாலும் இந்நோயின் தாக்குதல் குறைவாக இருக்கும்.

எஸ்.ஜெயராஜன் நெல்சன், பேராசிரியர் மற்றும் தலைவர்,பருத்தி ஆராய்ச்சி நிலையம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

## வெந்தயம் சாகுபடி

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,00:00 IST



**ரகங்கள்:** கோ.1, கோ.2 மற்றும் பூசா எரிலிபன்சிங்.

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை**: நல்ல வடிகால் வசதியுள்ள கரிசல் அல்லது அங்ககச்சத்து மிகுந்த மணற்பாங்கான நிலத்தில் நன்கு வளரும். மிதமான தட்பவெப்பநிலை ஏற்றது.

**பருவம்**: ஜூன் - ஜூலை மற்றும் அக்டோபர் - நவம்பர்

**விதையும் விதைப்பும்**: **விதையளவு**: எக்டருக்கு 12 கிலோ விதைகள்

**விதைப்பு:** நிலத்தை நன்கு உழுதபின் 3.5 து 1 அளவுள்ள பாத்திகளாகப் பிரித்து விதை களை விதைக்க வேண்டும். விதைக்கும் முன்னர் ஒரு எக்டருக்குதேவையான விதையுடன் 1.5 கிலோ அசோஸ்பைரில்லம் கலந்து விதைக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை:** அடியுரம்: எக்டருக்கு 25 கிலோ தொழு உரத்தை கடைசி உழவின்போது இடவேண்டும். மேலும் 30 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 40 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய உரங்களை இடவேண்டும். மேலுரம்: விதைத்த 30 நாட்கள் கழித்து மேலுரமாக எக்டருக்கு 20 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரத்தை இடவேண்டும்.

**நீர் நிர்வாகம்:** விதைத்தவுடன் ஒரு தண்ணீரும் பிறகு மூன்றாம் நாளும் அதனைத் தொடர்ந்து 7-10 நாட்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

**களைக் கட்டுப்பாடு மற்றும் பின்செய் நேர்த்தி**: களை எடுத்தல்: களைகள் முளைக்கும் முன் எக்டருக்கு 700 மில்லி பெண்டிமித்திலின் களைக்கொல்லி மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கல்நதுதெளிக்க வேண்டும். பின் இரண்டு அல்லது மூன்று முறை களை எடுக்க வேண்டும். பின் 3 மாதம் கழித்து மண் அணைக்க வேண்டும்.

**பின்செய்நேர்த்தி:** விதைத்த 20-25 நாட்களுக்குப் பிறகு பயிர் களைதல் வேண்டும். களைந்த பயிரை பசுங்கீரையாக உபயோகப்படுத்தலாம்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு:** வேரழுகல்: நோய் தோன்றும்போது 0.5 கிராம் கார்பன்டசிம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து வேர்ப்பாகத்தில் ஊற்ற வேண்டும். அல்லது ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். எக்டருக்கு 50 கிலோ புண்ணாக்கை நோய் தோன்றும்போது இடவேண்டும்.

**அறுவடை:** விதைத்த 20-25 நாட்கள் கழித்து அறுவடை செய்து பசுங்கீரையாக உபயோகப்படுத்தலாம். 90-100 நாட்களில் விதைகள் உருவாகிவிடும்.

**மகசூல்:** எக்டருக்கு பசுங்கீரை-4000-5000 கிலோ, விதைகள்: 500-700 கிலோ.

**-அகமது கபீர், வேளாண்மை ஆலோசகர்அக்ரி கிளினிக், தாராபுரம், 89037 57427.**

**பயிர்**:

*இடவேண்டிய சத்துக்கள் (கிராம் செடி ஒன்றுக்கு):*

வெந்தயம் - அடியுரம்: தழை - 30, மணி - 25, சாம்பல் - 40
வெந்தயம் - மேலுரம்: தழை - 20, மணி - 0, சாம்பல் - 0

*இப்கோ காம்ப்ளக்ஸ் 10:26:26 யூரியா இடவேண்டிய அளவு (கிராம் செடி ஒன்றுக்கு):*
வெந்தயம் - அடியுரம்: 10:26:26 - 97, யூரியா - 45, பொட்டாசியம் - 25
வெந்தயம் - மேலுரம்: 10:26:26 - 0, யூரியா - 44, பொட்டாசியம் - 0

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,00:00 IST



**உயர் விளைச்சல் ரகங்கள்:** டி.எம்.பி.1 - மானாவாரி யிலும் இறவையிலும், நெல் தரிசிலும் பயிரிடலாம். வயது 80-85 நாட்கள். ஆண்டு முழுவதும் பயிரிடலாம். டி.எம்.வி.4 - கோடை மற்றும் நெல் தரிசு சாகுபடிக்கு ஏற்றது. வயது 85-90 நாட்கள். டி.எம்.வி.6 - கோடை, நெல் தரிசுக்கு ஏற்றது. சம்பா அறுவடைக்குப் பிறகு உள்ள ஈரத்தைக்கொண்டு உழவு செய்து ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் பயிரிடலாம். வயது 85-90 நாட்கள். ஏக்கருக்கு 280 முதல் 350 கிலோ மகசூல். எண்ணெய்ச்சத்து 54 சதம். கோ.1- மானாவாரி மற்றும் இறவைக்கு ஏற்றது. வயது 85-90 நாட்கள். வி.ஆர்.ஐ.1 - பின்சம்பா நெல் அறுவடைக்கும் அடுத்த குறுவை நெல் அறுவடைக்கும்

இடைப்பட்ட குறுகிய காலத்தில் பயிரிட்டு அதிக விளைச்சல் பெற ஏற்றது. வயது 75 நாட்கள். வி.ஆர்.ஐ.2 - வயது 80-85 நாட்கள். மானா வாரி மற்றும் இறவைக்கு ஏற்றது. முடிக்கொத்து நோய்க்கு மிதமான எதிர்ப்புசக்தி கொண்டது.

**சாகுபடி நுட்பங்கள்:** எள் கரிசல் மற்றும் மணல் கலந்த செம்மண் நிலங்களில் நன்கு வளரும். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் மருந்தை கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும். அல்லது ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா பவுடரை ஈரவிதையுடன் கலந்து உலரவைத்து விதைக்கலாம். விதைப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன் கால் லிட்டர் ஆறிய அரிசிக் கஞ்சியில் ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லத்தை கலக்கி அதில் பூசண விதைநேர்த்தி செய்யப்பட்ட விதையினை கொஞ்சம் கொஞ்சமாக போட்டு கலக்கி பின் ஒரு கோணிப்பையின் மீது பரப்பி நிழலில் உலர்த்தியபின் விதைக்கலாம்.

மானாவாரி விதைப்பில் 25 து 25 செ.மீ. இடைவெளிக்கு ஒரு செடியும் இறவையில் 30 து 30 செ.மீ. இடைவெளிக்கு ஒரு செடியும் இருக்குமாறு செடிகளின் எண்ணிக்கையை குறையாமல் பராமரிக்க வேண்டும்.

இறவை எள் சாகுபடிக்கு எக்டருக்கு முறையே 35, 23, 23 தழை, மணி, சாம்பல் சத்துக்கள் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இதில் பாதி அளவு உரங்களை அடியுரமாகவும் மீதியை விதைத்த 35 நாளில் மேலுரமாகவும் இடவேண்டும். ஜிப்சம் ஒரு எக்டருக்கு 200 கிலோ அடியுரமாக இடவேண்டும். தவிர ஒரு எக்டருக்கு 5 கிலோ மாங்கனீசு சல்பேட் சுமார் 50 கிலோ மணலுடன் கலந்து நிலத்தில் மேலாக தூவிவிட வேண்டும்.

உயிர் உரமான அசோஸ்பைரில்லத்தை விதைநேர்த்தி செய்தும் நிலத்தில் நேரடியாக இட்டும் பயன்பெறலாம். 10 பொட்டலம் (2 கிலோ) அசோஸ்பைரில்லத்தை நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து நிலத்தில் இட்டு உழுதுவிடுவது நல்லது. எள் பயிர் வறட்சியைத் தாங்க வல்லது. ஆனாலும் செடிகள் நன்குவளர்ந்து பக்கக்கிளைகள் துளிர்விடும் வரை மண்ணின் தன்மைக்கு ஏற்ப 10-15 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பூக்கும், காய் பிடிக்கும் பருவங்களில் தண்ணீர் மிகவும் அவசியம். விதைத்தவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். பின் 3 நாட்கள் கழித்து உயிர் தண்ணீர் கட்டவேண்டும். விதைத்த 15 நாளில் ஒரு சதுர மீட்டருக்கு 11-16 செடிகள் இருக்குமாறு கலைத்துவிட வேண்டும். களைகளைக் கட்டுப்படுத்த புளூகுளோரலின் களைக்கொல்லியை 3 லிட்டர்/எக்டர் என்ற அளவில் விதைத்த 3ம் நாள் மண்ணில் தெளிக்க வேண்டும்.

காய்கள் அதிகம் பிடிக்க 3 மில்லி பிளானோபிக்ஸ் வளர்ச்சி ஊக்கியை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 30, 45 மற்றும் 60வது நாள் மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 135 மில்லி பிளானோபிக்ஸ் மற்றும் 200 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். மண்ணில் ஈரம் இருக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை மூலம் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்தலாம். மானோகுரோட்டோபாஸ், கார்பரில், குளோர்பைரிபாஸ், டைகுளோர்வாஸ் ஆகியவற்றுடன் ஏதேனும் ஒன்றை நட்ட 20, 35ம் நாட்களில் ஒரு எக்டருக்கு 500 முதல் 750 மில்லி என்ற அளவில் நீரில் கலந்து தெளிக்கலாம். மூன்றில் இரண்டு பாக காய்கள் முதிர்ந்தவுடன் செடிகளை அடிப்பகுதியில் அறுத்து வட்டமாக அமுக்கிவைத்து 3-5 நாள் காயவைத்து அடித்து விதைகளை பிரிக்க வேண்டும். (தகவல்: முனைவர் எம்.சண்முகவல்லி, முனைவர் தங்க ஹேமாவதி, பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம்-625 252. போன்: 04630-261 226.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## கரும்பில் இடைக்கணுப்புழு கட்டுப்பாடு

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,00:00 IST



**பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்:** தமிழகத்தில் கரும்பு பயிரிடப்படும் அனைத்து இடங்களிலும் காணப்படும் இந்தப்பூச்சி பெரும்பாலும் கரும்பின் பின் வளர்ச்சிப் பருவத்தில் தோன்றி, அறுவடை

வரை காணப்படும். குறைந்த வெப்பநிலையும் அதிக ஈரப்பதமும் இருக்கும்போது இதன் தாக்குதல் தீவிரமாகக் காணப்படும். முட்டைகளிலிருந்து வெளிவரும் இளம்புழுக்கள் முதலில் விரிவடையாத இளம் இலைகளை உண்கின்றன. பின் அவை கரும்பின் இடைக்கணுப் பாகத்தை துளைத்து, தண்டிற்குள் சென்று உட்திசுக்களை குடைந்து உண்டு, நீண்ட சுரங்கங்களை உண்டுபண்ணுகின்றன. தாக்கப்பட்ட கரும்பில் பெரும்பாலும் குருத்தழிவு அறிகுறி தென்படும். பூச்சி தாக்குதல் தீவிரமாக இருக்கும்போது சுமார் 25 சதம் வரை கரும்புகள் சேதப்படுத்தப்படுவதோடு அவற்றின் சர்க்கரைச் சத்தும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

**பூச்சியின் வாழ்க்கைச் சரிதம்:** பெண் அந்துப்பூச்சி, நீள் வட்ட வடிவ, வெண்மை நிற செதிள்களைப் போன்ற தட்டையான முட்டைகளை இரு வரிசைகளில் இளம் இலைகளின் மேற்பரப்பில் இடும். ஒவ்வொரு வரிசையிலும் 10-15 முட்டைகள் வரை காணப்படும். முட்டைகளிலிருந்து 3-4 நாட்களில் இளம்புழுக்கள் வெளிவரும். அவை முதலில் விரிவடையாத குருத்து இலைகளைசுரண்டிஉண்டு,பின்இடைக் கணுப்பாகத்தை துளைத்து தண்டிற்குள் செல்லும். புழுக்கள் துளைத்து உட்சென்ற துவாரத்தின் வழியாக கழிவுப் பொருட்கள் வெளித்தள்ளப் பட்டிருக்கும். அவை 30-40 நாட்களில் முழு வளர்ச்சிஅடையும். வளர்ந்த புழு கூண்டுப் புழுவாக மாறும் முன்னர் தண்டில் ஒரு துவாரம் உண்டுபண்ணி அதை பட்டுபோன்ற மெல்லிய இலைகளால் பின்னி மூடிவிட்டு பின் தண்டின் உள்ளேயே கூண்டுப்புழுவாக மாறி 10-15 நாட்களில் அந்துப்பூச்சியாக வெளிவரும்.

**பூச்சி கட்டுப்பாடு:** * இடைக்கணுப் புழு தாக்காத விதைக்கரணைகளை தேர்ந்தெடுத்து நடவுக்கு பயன்படுத்த வேண்டும். * நட்ட 150 மற்றும் 210ம் நாட்களில் தோகை உரித்து பயிரை நன்கு பராமரிப்பதன்மூலம் முட்டைகளை அழிப்பதோடு தண்டைத் துளைப்பதையும் தடுக்கலாம்.

* தேவைக்கு அதிகமாக தழைச்சத்து இடுவதைத் தவிர்க்க வேண்டும்.

* முட்டைக் குவியல்களை சேகரித்து அழிக்கலாம். * டிரைக்கோகிரம்மா என்னும் முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 20,000 வீதம் வாரத்திற்கு ஒருமுறை நட்ட 4வது முதல் 10வது மாதம் வரை விடவேண்டும்.

* டெலினாமஸ் இனத்தைச் சேர்ந்த சில ஒட்டுண்ணிகளும் முட்டைகளைத் தாக்கி அழிக்கக்கூடியவை. * கோ.975, கோ.62175, கோ.6506 போன்ற ரகங்கள் இப்பூச்சியின் தாக்குதலைத் தாங்கி வளரக்கூடியவை.

முனைவர் கோ.பி.வனிதா,வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,மதுரை-625 104.
முனைவர். ரா.கோபாலகிருஷ்ணன்,ரோவர் வேளாண்மைக்கல்லூரி, பெரம்பலூர்.

## வெளி மாவட்ட பலாப்பழம்: பண்ருட்டியில் அதிக விலை

ஜூன் 12,2012,09:43



பண்ருட்டி : பண்ருட்டியில் பலாப்பழம் விளைச்சல் இல்லாததால் வெளி மாவட்ட பழத்தின் விலை 'ஜெட்' வேகத்தில் விலை உயர்ந்துள்ளன. பண்ருட்டி என்றால் நினைவிற்கு வருவது பலாப்பழம் தான். தானே புயலில் ஆயிரக்கணக்கான பலா மரங்கள் வேரோடு சாய்ந்தன. ஆண்டு தோறும் ஜனவரி மாதம் பிஞ்சு வைத்து மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதம் வரை பண்ருட்டி நகரத்தில் 'களைகட்டும்' பலாப்பழம் வியாபாரம்.
தற்போது 98 சதவீதம் பலாப்பழ உற்பத்தி இல்லாததால் களை இழந்து காணப்படுகிறது. ஆண்டு முழுவதும் பலாப்பழம் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் மட்டும் பட்டுக்கோட்டை, விருத்தாசலம் உள்ளிட்ட பகுதியில் இருந்து பலாப்பழம் இறக்குமதி செய்து விற்கின்றனர். புயலில் பாதிப்பிற்கு பின் வளர்ந்த சில காய்களை தற்போது விற்கின்றனர். சிறிய பழம் கடந்த ஆண்டு 50 ரூபாய் முதல் 100 வரை விற்றது. தற்போது 250 முதல் 300 ரூபாய்க்கும், கடந்த ஆண்டு 200க்கு விற்றவை தற்போது 500 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரை விற்கிறது. புயலின் சேதத்திற்கு பின் வெளி மாவட்ட பலாப்பழம் கலந்து விற்பதால் சுவை குறைவாக உள்ளது. இதனால் பலாப்பழம் வாங்கும் ஆர்வம் தற்போது மக்களிடம் குறைந்துள்ளது.

## விதை பரிசோதனை அலுவலகத்தில் வேளாண் இயக்குனர் ஆய்வு

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,00:56 IST

திருவள்ளூர்: விதை பரிசோதனை அலுவலகத்தில், விதை சான்று இணை இயக்குனர் ஆய்வு மேற்கொண்டார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கி வரும் விதை பரிசோதனை அலுவலகத்திற்கு, கோவை விதை

சான்று மற்றும் அங்கக சான்று இயக்குனரகத்திலிருந்து விதை சான்று இணை இயக்குனர் தங்கராஜ் திடீர் ஆய்வு மேற்கொண்டார். விதை பரிசோதனை ஆய்வகத்தில் ஆய்வின் போது, விதை மாதிரிகள் வரவிலிருந்து பரிசோதனை முடிவு அறிவிப்பு வரையிலுள்ள, தொழில்நுட்ப ஆய்வு பணிகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு மேற்கொண்டார்.

தமிழக அரசின் உழவர் பெரு விழாவின் பயனாக, விவசாயிகளிடமிருந்து வரும் பணிவிதை மாதிரிகள் பற்றியும் ஆய்வு மேற்கொண்டார். விதை பரிசோதனை முடிவுகள், எல்லா பயிர்களுக்கும் வரையறுக்கப்பட்ட நாட்களில் பரிசோதனை முடிவுகள் அனுப்பப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்தார். ஆய்வின் போது, திருவள்ளூர் விதை பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் முத்துபெருமாள் உடனிருந்தார்.

## பட்டு வளர்ச்சித்துறை தர்ணா போராட்டம்

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,02:19 IST

சேலம்: சேலம் நாட்டாண்மை கழக கட்டிடம் முன், தமிழ்நாடு பட்டுவளர்ச்சித்துறை அலுவலர் சங்கம் சார்பில், தர்ணா போராட்டம் நடந்தது.

அகில இந்திய மாநில அரசுப்பணியாளர் மகாசம்மேளன பொதுச்செயலாளர் பாலசுப்ரமணியன், மாநில தலைவர் பால் பாண்டியன், அரசுப் பணியாளர் சங்க மாநில துணை பொதுச்செயலாளர் பெரியசாமி ஆகியோர் பங்கேற்று பேசினர். 15 ஆண்டுக்கும் மேலாக பணியாற்றி வரும், 46 தினக்கூலி பணியாளர்களையும், பணி நிரந்தரம் செய்ய வேண்டும். தினக்கூலிப் பணியாளர்களுக்கு, இயக்ககத்தால் வழங்கிய அகவிலைப்படி உயர்வு முரண்பாடுகளை, சங்கம் வழங்கியுள்ள அரசாணையின்படி வழங்க வேண்டும்.

கல்வித்தகுதி உள்ள இரவு காவலர்களுக்கு, அலுவலக உதவியாளர், இளநிலை உதவியாளர், இளநிலை ஆய்வாளர் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகள், தர்ணாவில் வலியுறுத்தப்பட்டன.பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## தக்காளி விலை சரிவு: விவசாயிகள் கலக்கம்

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,03:18 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தக்காளி வரத்து அதிகரித்ததை தொடர்ந்து விலை குறைந்துள்ளது.

தமிழக அளவில் தக்காளி சாகுபடியில் கிருஷ்ணகிரி மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. இங்கு ராயக்கோட்டை, மாதேபட்டி, பாலகுறி, வரட்டனபள்ளி, வேப்பனபள்ளி, போச்சம்ள்ளி, மத்தூர், சூளகிரி, காவேரிப்பட்டணம், கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை உள்பட மாவட்டம் முழுவதும், 9,000 ஏக்கர் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் தக்காளிகள் ராயக்கோட்டை, கிருஷ்ணகிரியில் உள்ள தக்காளி மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும், சென்னை, கோவை, மதுரை, வத்தலகுண்டு, கேரளா ஆகிய பகுதிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

கடந்த சில நாட்களாக தக்காளி விளைச்சல் அதிகரித்ததை தொடர்ந்து தற்போது சந்தைக்கு தக்காளி வரத்தும் அதிகரித்துள்ளது. இதனால் தக்காளி விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. 15 கிலோ எடை கொண்ட தக்காளி பெட்டி நேற்று கிருஷ்ணகிரி தக்காளி சந்தையில் 90 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

இது கடந்த வாரத்தை விடஒரு பெட்டிக்கு 60 ரூபாய் குறைவாகும். தொடர்ந்து தக்காளி வரத்து அதிகரிக்கும் நிலை உள்ளதால், வரும் நாட்களில் சந்தையில் தக்காளி விலை மேலும் குறைய வாய்புள்ளது. தக்காளி விலை வீழ்ச்சியடைந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## தேங்கிய சம்பங்கி விவசாயிகள் வேதனை

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2012,23:54 IST

திண்டுக்கல்: முகூர்த்தம் இல்லாததால், திண்டுக்கல் பூச்சந்தையில் தேங்கிக்கிடந்த ஆயிரம் கிலோ சம்பங்கி குப்பையில் கொட்டப்பட்டது.

மே மாதத்தில் சம்பங்கி பூவிற்கு அதிக கிராக்கி இருந்ததால், கிலோ 400 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதனால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தற்போது முகூர்த்தம் இல்லாததால், சந்தையில் சம்பங்கி தேங்கியுள்ளது.

நேற்று முன்தினம், சம்பங்கி கிலோ, 10 ரூபாய்க்கு விற்கப்பட்டும், வாங்க ஆள் இல்லை. இதனால் "எசன்ஸ்' தயாரிப்பு நிறுவனத்திற்கு தகவல் கொடுத்து, கிலோ 5ரூபாய்க்கு வாங்கிக் கொள்ளுமாறு வேண்டினர். அவர்கள் நிராகரித்ததால், ஆயிரம் கிலோ சம்பங்கியை குப்பையில் கொட்டினர். அனைத்து பூக்களின் விலையும் இறங்குமுகமாக இருந்தது. மல்லி கிலோ 50 ரூபாய்க்கும், அரளி- 10, ரோஜா- 30, கோழிக்கொண்டை- 50, செண்டுமல்லி- 10, கனகாம்பரம்- 80, முல்லை- 60 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

## மரக்கன்று நடும் விழா

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,00:11 IST

தேனி: ஐக்கிய நாடுகள் சபை, 2012 ம் ஆண்டை " உலக கூட்டுறவு ஆண்டாக' அறிவித்துள்ளது. இதன்படி தமிழக அரசு அறிவித்தள்ளபடி,மாணவர்களுக்கு விளையாட்டு போட்டிகள், ஓவியப்போட்டிகள் <உள்ளிட்ட போட்டிகள் நடத்துவதுடன் 16 லட்சம் மரக்கன்றுகள் நட்டு பராமரித்திட கூட்டுறவு துறை திட்டமிட்டுள்ளது.

தேனியில் மரக்கன்றுகள் நடும் விழா, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லிநகரம் கிளை மற்றும் லட்சுமிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நடந்தது. தேனி மண்டல இணைப்பதிவாளர் கே.எம்.வெள்ளியங்கிரி மரக்கன்றுகள் நட்டு தொடங்கி வைத்தார்.

விழாவில், துணைப்பதிவாளர்கள் திருநாவுக்கரசு,திருப்பதி, கூட்டுறவு சார் பதிவாளர்கள் சுருளியப்பன், மனோகர், முருகேசன்,பாலகிருஷ்ணன், தினகரன், ராமசாமி, சண்முகம், பால், குழந்தைவேலு,ஜெயச்சந்திரன் <பங்கேற்றனர்.

## கூடலூரில் நெல் சாகுபடி கேள்விக்குறி: நீர்வரத்து இன்றி வறண்ட கண்மாய்

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,00:06 IST

கூடலூர்: கூடலூர் ஒட்டான்குளம் கண்மாய் வறண்டு கிடப்பதால் முதல்போக நெல் சாகுபடியை எதிர்நோக்கியுள்ள விவசாயிகள் இரண்டாவது ஆண்டாக விவசாயம் செய்ய முடியாமல் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

கூடலூர் ஒட்டான்குளம் கண்மாயை நம்பி 500 ஏக்கர் பரப்பளவில் இரு போக நெல் சாகுபடி

உள்ளது. சுரங்கனாறு நீர்வீழ்ச்சியில் இருந்து நீர்வரத்து உள்ளது. கடந்த ஆண்டு இந்த நீர்வீழ்ச்சி அருகே மண்சரிவு ஏற்பட்டதால், கண்மாய்க்கு நீர்வரத்து குறைந்து, மாற்றுப்பாதையில் சென்று பெரியாற்றில் கலந்தது. இதனால், கடந்த ஆண்டு இரண்டு போக நெல் விவசாயமும் செய்ய முடியாமல் போனது.

மண்சரிவை சீரமைத்து கண்மாய்க்கு நீர்வரத்து ஏற்படுத்தும் முயற்சியில் எம்.எல்.ஏ.,தங்கதமிழ்செல்வன் ஈடுபட்டார். ஆனால், மண்சரிவை சீரமைக்க கூடுதல் நிதி தேவைப்படுவதால் இத்திட்டம் கைவிடப்பட்டது. முதல் போக நெல் சாகுபடியை எதிர்நோக்கியுள்ள விவசாயிகள் இரண்டாவது ஆண்டாக விவசாயம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,00:29 IST

சிவகங்கை: "சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில், ஜூன் 15 அன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும். அன்று காலை 10.30 மணிக்கு துவங்கும் கூட்டத்தில், விவசாயிகள், பொதுமக்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம்," என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

### விவசாயிகளுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2012,02:37 IST

தூத்துக்குடி : தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் கோரம்பள்ளம் ஆறு உபவடி கோட்டத்தின் கீழ் திறன் வளர்த்தல் பயிற்சி நடந்தது. இப்பயிற்சி வேளாண்மைத்துறை அலுவலர்கள் 30 பேருக்கு அளிக்கப்பட்டது. சென்னை சி.இ.சியிலிருந்து வந்த பயிற்சியாளர்கள் தண்ணீரின் முக்கியத்துவம் குறித்தும், நிலத்தடி நீர் பற்றியும், தண்ணீரை வீணா க்குவதால் வரும் பிரச்னைகள் குறித்தும் விரிவாக பயிற்சியளித்தனர். பயிற்சியில் தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்சிங் தனராஜ், துணை இயக்குநர் சீனிவாசன், குருமூர்த்தி, வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்ராஜ், திருச்செந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் உத்தண்டராமன் மற்றும் வேளாண் மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். தொ டர்ந்து காலாங்கரை, குலையன்கரிசல் மற்றும் அத்திமரப்பட்டி கிராமத்தை சேர்ந்த 100 விவசாயிகளுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி நடந்தது.

விவசாயிகள் தங்கள் கிராமத்தில் உள்ள வடிகால் மற்றும் மடை சம்பந்தமான பிரச்னைகளை எடுத்து கூறினர். பயிற்சி ஏற்பாடுகளை வே ளாண்மை அலுவலர் சிவகாமி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

---

தினகரன்

பருத்தி விளைச்சல் அமோகம்

பதிவு செய்த நேரம்:2012-06-12 11:44:48

செய்துங்கநல்லூர் : கருங்குளம் பகுதி வல்லகுளம், அரசர்குளம், மல்லல், புதுக்குளம், மணல்விளை, சேரகுளம், ராமானுஜம்புதூரில் எம்ஜி5 ரக  பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 6 கிலோ விதை விதைக்கப்பட்டது. ரகத்தை பொறுத்து ஒரு கிலோ விதை ரூ.70 முதல் ரூ.900 வரை விவசாயிகள் வாங்கினர். குறிப்பிட்ட காலக்கட்டத் தில் களைபறி மற்றும் மருந்து தெளிக்கும் பணி நடந்தது. இதனால் 1 ஏக்கருக்கு 10 குவிண்டால் என்ற அள விற்கு பருத்தி அமோகமாக விளைந்துள்ளது. விளைச் சல் நன்றாக இருந்தாலும் போதிய விலை கிடைக்க வேண்டும் என பருத்தி பயிரிடும் விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து விவசாயி ராஜகோபால் கூறுகையில், பருத்தி குவிண்டாலுக்கு ரூ.6 ஆயிரம் வரை அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்’ என்றார்.

வரத்து அதிகம்: விலை குறைவு கோவில்பட்டியில் பலாப்பழ விற்பனை ஜோர்

பதிவு செய்த நேரம்:2012-06-12 11:44:15

கோவில்பட்டி: கோவில்பட்டி மார்க்கெட்டிற்கு பலாப்பழம் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. இதனால் விற்பனை படுஜோராக நடந்து வருகிறது.
கேரளா மாநிலம் அடூர், பாலாகுளம், காயாங்குளம், ஆசூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்

இருந்து கோவில்பட்டி மார்க்கெட்டிற்கு லாரிகள் மூலம் பலாப்பழம் கொண்டு வரப்படுகிறது. கேரளாவில் தற்போது பலாப்பழ சீசன் நன்றாக உள்ளதால் அங்கிருந்து பலாப்பழங்கள் அதிகளவில் வருகின்றன.

மேலும் பண்ருட்டி, பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் விளையும் பலாப்பழங்கள் சென்னை போன்ற வட மாவட்டங்களுக்கு கடந்த ஆண்டு வரை விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்டு வந்தன. இந்நிலையில் பண்ருட்டி, பட்டுக்கோட்டை போன்ற பகுதியில் ஏற்பட்ட தானே புயலால் பெரும்பாலான பலாமரங்கள் வேரோடு சாய்ந்து விட்டன. இதனால் இந் தாண்டு சென்னை போன்ற வட மாவட்டங்களுக்கு கேரள மாநிலத்தில் இருந்து பலாபழங்கள் கொண்டு செல்லப்பட்டு வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

கோவில்பட்டி மார்க்கெட்டிற்கு கேரளாவில் இருந்து நாள்தோறும் அதிக எண்ணிக்கையில் பலாப்பழம் வருகிறது. இதனால் பலாப்பழ விலையும் குறைந்து விட்டது. கடந்த மாதம் ஒரு கிலோ பலாப்பழம் ரூ.15ல் இருந்து ரூ.12 வரை விற்கப்பட்டது. தற்போது வரத்து அதிகரிப்பினால் ஒரு கிலோ பலாப்பழம் 8 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. இதனால் கோவில்பட்டி மற்றும் சுற்றுப்பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் மொத்தமாக பலாப்பழங்களை கொள்முதல் செய்து வாங்கி செல்கின்றனர்.

---